இனிமையான குழந்தைகளே! தனது புத்தி எந்த தேகதாரி மீதும் மாட்டிக் கொள்ளக் கூடாது. ஒரு விதேகி (தேகமற்ற) தந்தையை நினைவு செய்ய வேண்டும். மேலும், பிறருக்கும் கூட தந்தையின் நினைவை மட்டும் ஏற்படுத்த வேண்டும்.

கேள்வி: தனது வாழ்க்கையை வைரம் போல் சிரேஷ்டம் (உயர்ந்ததாக) ஆக்குவதற்காக முக்கியமாக எந்த விசயங்களின் கவனம் தேவை?

பதில்: 1. மிகுந்த யோக யுக்த் நிலையில் இருந்து உணவு சமைக்க வேண்டும் மற்றும் உண்ண வேண்டும். 2. ஒருவருக்கொருவர் தந்தையின் நினைவை ஏற்படுத்தி உயிர்தானம் அளிக்க வேண்டும். 3. எந்த விகர்மமும் செய்யக் கூடாது. 4. வீண் விசயங்களைப் பேசுபவர்களின் தொடர்பி லிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டும், வேண்டாத, வீணான விசயங்களைப் பேசக் கூடாது. 5. எந்த தேகதாரியிடமும் தனது புத்தியின் பற்றுதலை வைக்கக்கூடாது, தேகதாரியிடம் மாட்டிக் கொள்ளக்கூடாது. 6. ஒவ்வொரு அடியிலும் அழிவற்ற சர்ஜனிடம் (மருத்துவரிடம்) ஆலோசனை கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். தனது நோயை சர்ஜனிடம் மறைக்கக் கூடாது.

ஓம்சாந்தி. குழந்தைகள் யாருடைய நினைவில் அமர்ந்திருக்கிறீர்கள்? (சிவபாபாவின் நினைவில்). சிவபாபாவை மட்டும் நினைவு செய்ய வேண்டும், வேறு எந்த தேகதாரியையும் நினைவு செய்யக் கூடாது. உங்களுக்கு எதிரில் இந்த தேகதாரி (பிரம்மா) அமர்ந்து இருக் கின்றார், இவரைக் கூட நினைவு செய்யக்கூடாது. யாருக்கு தனக்கென்று தேகம் இல்லையோ அந்த ஒரு விதேகியை மட்டும் நீங்கள் நினைவு செய்ய வேண்டும். இந்த மம்மா, பாபா மற்றும் ஒப்பற்ற சேவதாரி குழந்தைகள் அனைவரும் சிவபாபா மூலமே கற்றுக்கொள்கிறார்கள். எனவே நினைவும் கூட சிவபாபாவை மட்டுமே செய்ய வேண்டும். எந்த குழந்தையாவது சென்று யாருக்கேனும் புரியவைக்கின்றார் என்றாலும் கூட சிவபாபா இவருக்கு கற்பிக்கின்றார் என்று புத்தியில் புரிந்து கொள்ள வேண்டும். புத்தியில் சிவபாபா வின் நினைவு இருக்க வேண்டுமே தவிர தேகதாரி யினுடைய நினைவு அல்ல. ஒருவேளை, இந்த தேகதாரியை நீங்கள் நினைவு செய்கிறீர்கள் எனில் இது பொதுவானது ஆகிவிடுகிறது. எந்த தேகதாரியிடமும் மாட்டிக் கொள்ளக்கூடாது என்று தந்தை கூறுகின்றார். யார் அனைவருக்கும் சத்கதியை அளிக்கக்கூடியவரோ, அவர் ஒருவரையே நீங்கள் நினைவு செய்ய வேண்டும். ஒருவேளை, இந்த சாகாரமானவரை (பிரம்மா பாபா) நினைவு செய்தால் அந்த நினைவு பலனற்றதாகும். எவ்வாறு லௌகீக தந்தையை குழந்தைகள் நினைவு செய்கின்றனர், ஆனால், அதனால் எந்த இலாபமும் கிடையாது. எங்களுக்கு இந்த பிராமணி (நிமித்த சகோதரி) கற்பிக்க வேண்டும் என்று யாராவது பிராமணியை நினைவு செய்தால், அதுவும் பலனற்றது ஆகிறது. எவருடைய நினைவும் இருக்கக்கூடாது. நமக்கு சிவபாபா கற்பித்துக் கொண்டிருக்கின்றார், கல்யாணகாரி (நன்மை செய்யும்) சிவபாபா ஆவார். தேக தாரியிடம் ஒருபொழுதும் பலியாகக் கூடாது. இந்த பாபா கூட மன்மனாபவ என்று உங்களுக்குக் கூறுகின்றார். தேகதாரியை நினைவு செய்தால் துர்கதியை அடைவார்கள். சிலருக்கு பிராமணியிடம் புத்தி ஈடுபடுகிறது என்பதை தந்தை அறிவார். இது தவறு ஆகும். தேகதாரி மீது பற்று

இருக்கக்கூடாது. என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்பது பாபாவின் கட்டளை ஆகும். அதிகாலையில் எழுந்து என்னை நினைவு செய்யுங் கள். தேகதாரிகளுக்கு லௌகீகம் என்று கூறப்படுகிறது. அவர்களை நினைவு செய்யக் கூடாது. நிராகாரமான என் ஒருவரை மட்டும் நினைவு செய்யுங்கள். மகிமை கூட ஒருவருக்குத் தான் உள்ளது. சிவாய நமஹ, சிவன் தேகம் அற்றவர் ஆவார். நீங்கள் தந்தையிடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும். இந்த தேகம் கூட அவருடையது கிடையாது.

இந்த சரீரத்தின் மூலம் நான் உங்களுக்கு மட்டும் கற்பிக்கின்றேன். ஏனெனில், என்னுடையது என்று எனக்கு எந்த சரீரமும் கிடையாது, ஆகையால், இவருடையதை ஆதாரமாக எடுக்கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். கல்பத்திற்கு முன்பும் இவர் மூலம் நான் குழந்தைகளாகிய உங்களுக்கு எளிய இராஜயோகத்தைக் கற்பித்திருந்தேன். இதன் மூலம் நீங்கள் தூய்மை ஆகியிருந்தீர்கள். எனது சேவையே தூய்மையற்றவர்களை தூய்மை ஆக்குவது ஆகும். மற்றபடி, கருணை அல்லது ஆசீர்வாதம் கேட்பது தவறு ஆகும். இந்த விசயங்கள் பக்தி மார்க்கத்தில் நடைபெறுகின்றன, இங்கே கிடையாது. யாராவது நோய் வாய்ப்பட்டுவிட்டால் நான் சரி செய்து விடுவேன் என்பதும் கிடையாது, இது எனது தொழில் அல்ல. தூய்மையற்ற எங்களை தூய்மை யாக்கி துர்கதியிலிருந்து சத்கதிக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று அழைக்கின்றனர், பாடு கின்றனர். ஆனால், அர்த்தத்தை அறியவில்லை. பக்தர்களோ முழு உலகிலும் உள்ளனர், அவர்கள் அனைவரும் யாரை நினைவு செய்கின்றனர்? ஒரு பதீத பாவனர் தந்தையை நினைவு செய்கின்றனர். முழு உலகின் மனிதர்களை விடுவிப்பவர் அவர், வழிகாட்டியாகவும் இருக்கின்றார். துக்கத்திலிருந்து விடுவித்து பரந்தாமத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியவர் தந்தையே ஆவார். எனவே, தந்தையின் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். இந்த நிலையில் என்ன செய்ய வேண்டும்? என்று ஒவ்வொரு அடியிலும் ஆலோசனை கேட்க வேண்டும். சர்ஜனோ ஒருவரே ஆவார். இது (பிரம்மா) சர்ஜன் தங்குவதற்கான மற்றும் பேசுவதற்கான இடம் ஆகும். இந்த சர்ஜனைப் போன்று வேறு எவரும் வழி சொல்ல முடியாது. குழந்தைகள் நேரத்தை வீணாக்கக் கூடாது. நாளுக்கு நாள் ஆயுள் குறைந்து கொண்டே செல்கிறது. விநாசம் எதிரில் நிற்கிறது - கவனக் குறைவாக இருந்தால் மிகவும் பச்சாதாபப்பட நேரிடும். வேண்டாத, வீணான விசயங்களைப் பேசுவதில் நேரத்தை வீணாக்குவதால் உங்களுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. நீங்கள் பிறரைக் காப்பாற்ற வேண்டும். மனிதர்களோ ஒருவரை யொருவர் தந்தையுடன் சந்திக்க வைப்பதில்லை, இன்னும் அதிகமாக விலகச் செய்கின்றனர். இந்த சமயம் அனைவரின் இறங்கும் கலை ஆகும். ஆகவே அவசியம் தவறான வழியையே சொல்வார்கள். குழந்தைகளுக்கு இப்பொழுது ஞானம் கிடைத்திருக்கின்றது. எனவே, எந்த விகர்மமும் செய்யக்கூடாது, மறைக்கக் கூடாது. நாம் ஜென்ம ஜென்மங்களாக பாவம் செய்தே வந்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். தந்தையினுடையவர் ஆன பிறகும் ஒருவேளை பாவம் செய்தால் பிறர் என்ன கூறுவார்கள்? எங்களுக்கு பரமாத்மா கற்பிக்கின்றார் என்று இவர்கள் கூறுகின்றார்கள், மேலும், இவர்களே பாவம் செய்து கொண்டும் இருக்கின்றார்கள்! பாவம் செய்துவிட்டு பிறகு அதை சொல்லவில்லை என்றால் அந்த சுமை இறங்காது. பழக்கம் உறுதியாகிவிடுகிறது. நம்மை எவரும் பார்க்கவில்லை என்று நினைக்

கின்றனர். பகவான் பார்க்கின்றார் அல்லவா. இல்லையெனில் கர்ப்பத்தில் எவ்வாறு தண்டனை கிடைக்கும்? என் மூலம் இந்த பாவச் செயல் ஏற்பட்டுவிட்டது என்று உள்ளத்தில் உறுத்தல் இருக்கும். சிலர் விகாரத்திற்கு வசமாகிவிட்டு இங்கு வந்து அமர்கின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், அது தந்தைக்கு தெரிந்துவிடுகின்றது. மிகவும் கீழான புத்தியாக இருக்கும் காரணத் தினால் புரிந்து கொள்வதில்லை, பாவம் செய்து கொண்டே இருக்கின்றனர், அதைச் சொல்வதும் இல்லை. சில விசயங்களை சாகார தந்தை கூட அறிந்து கொள்கின்றார், ஆனால், குழந்தைகள் சொல்வதே இல்லை. பாவம் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் அது அதிகரித்துக் கொண்டே இருக்கும். பிறகு, 100 மடங்கு தண்டனையை அனுபவிக்க வேண்டிய திருக்கும் என்று தந்தை கூறுகின்றார். திருடன் திருடிக்கொண்டே இருப்பார், அவருக்கு திருட்டைத் தவிர எதுவும் மனதில் தோன்றவே தோன்றாது. அத்தகையவர்களை சிறைப் பறவைகள் என்று கூறப்படுகிறது. தந்தை யினுடைய நினைவை ஏற்படுத்தாமல் எவராவது வேண்டாத, வீணான விசயங் களைப் பேசினால் இவர்கள் எனது எதிரி என்று புரிந்துகொள்ளுங்கள் என்பதை தந்தை குழந்தைகளுக்குப் புரியவைக் கின்றார். வீண் விசயங்களைப் பேசவும்கூடாது. கேட்கவும் கூடாது. சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று ஒருவருக்கொருவர் எச்சரிக்கை செய்துகொண்டே இருங்கள். இன்னார் எனக்கு ஏன் கூறுகின்றார்கள்? என்று சிலருக்கு கோபமும் வருகின்றது. ஆனால், உங்களுடைய கடமை நினைவை ஏற்படுத்துவதாகும். நினைவின் மூலம் விகர்மங்கள் வினாசம் ஆகும். எதுவரை கர்மாதீத நிலை வரவில்லையோ, அதுவரை எண்ணம், சொல், செயல் மூலம் ஏதாவது, ஏதாவது தவறுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். கர்மாதீத் நிலை இறுதியில் வரும். அதுவும் குறை வானவர்களே மதிப்புடன் தேர்ச்சி பெறுவார்கள். யார் சேவை செய்வதில்லையோ, அவர்களுக்கு இந்த நிலை வரவே வராது. யார் சேவையில் இருக்கின்றார்களோ, அவர்கள் ஒருவருக்கொருவர் - பரமபிதா பரமாத்மாவுடன் உங்களுக்கு என்ன சம்பந்தம் உள்ளது? என்பதை நினைவு படுத்திக்கொண்டே இருப்பார்கள். நான் கூட உணவு உண்பதற்கு அமர்கின்றேன், ஸ்நானம் செய் கின்றேன், அப்பொழுது சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று எனக்கும் கூட நினைவை ஏற்படுத்துங்கள் என்று பிரம்மா பாபா தன்னுடைய உதாரணத்தைக் கூறுகின்றார். சுயம் நினைவு செய்யவில்லை என்றாலும் கூட பாபாவின் வழி காட்டுதலை (டைரக்ஷன்) நடைமுறையில் கொண்டுவர வேண்டும். ஒருவேளை, தனக்கு நன்மை செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால் ஒருவருக்கொருவர் நினைவை ஏற்படுத்துங்கள். பிரம்மா போஜனத்திற்கு மிகுந்த மகிமை உள்ளது. உணவு சமைக்கும்பொழுது கூட பிராமணர்களின் நினைவு சரியாக இருக்க வேண்டும். அப்பொழுதே, உணவில் சக்தி நிறையும். நினைவின் மூலம் தான் உங்களுக்கு உயிர் தானம் கிடைக்கிறது. தன்னுடைய வாழ்க்கையை வைரம் போல் ஆக்க வேண்டும். எளியதிலும் எளிய விசயம் என்னை நினைவு செய்யுங்கள், தூய்மை ஆகுங்கள் என்பதாகும். பதீதமானால் 100 மடங்கு தண்டனை கிடைக்கும். தந்தையாகிய என்னை நினைவு செய்துகொண்டே இருந்தீர்கள் என்றால் விகர்மங்களும் வினாசம் ஆகும் மற்றும் நான் ஆஸ்தியும் கொடுப்பேன். கொஞ்சம் நினைவு செய்தீர்கள் என்றால் ஆஸ்தியும் கொஞ்சம் கிடைக்கும். கீதையில் கூட முதலிலும் மற்றும் முடிவிலும் மன்மனாபவ என்பது வருகின்றது. எந்த தேகதாரியின் நினைவும் வரக்கூடாது. சிவாபாவை நினைவு செய்தீர்கள்

என்றால் உங்களுக்கு நன்மை விளையும், பாவம் எரிந்து போகும். கங்கையில் ஸ்நானம் செய்வதால் எந்த பாவமும் விநாசம் ஆகுவதில்லை. அது பாவனை ஆகும் என்று கூறுகின்றனர், ஆனால், பாவனையே தவறானதாகும். கங்கை பதீத பாவனி கிடையாது. பதீத பாவனர் ஒரு தந்தை ஆவார். எந்த ஒரு ஸ்தூல பொருளை யும் நீங்கள் நினைவு செய்யக்கூடாது. ஒரு சிவபாபாவை மட்டும் நினைவு செய்ய வேண்டும்.

ஹே, இறைத்தந்தையே!, ஹே, பரமபிதா பரமாத்மா! என்று ஆத்மா கூறுகிறது. நான் வந்திருக்கின்றேன், என்னை நினைவு செய்யுங்கள் என்ற மிக எளிய உபாயத்தை சொல்கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். இறுதியில் எனது நினைவு இருந்தது என்றால் நீங்கள் என்னை வந்தடைவீர்கள். சரீரம் மற்றும் ஆத்மா உள்ளது அல்லவா! மனித ஆத்மாவை பாவ ஆத்மா, புண்ணிய ஆத்மா என்று கூறப்படுகிறது. புண்ணிய பரமாத்மா என்று கூறப்படுவதில்லை. ஆத்மா தான் பதீதம் ஆகிறது. பிறகு, சரீரமும் பதீதமாகக் கிடைக்கின்றது. தந்தை ஆத்மாக்களுடன் உரையாடுகின்றார். ஆத்மா அழிவற்றதாகும். தந்தை, குழந்தைகள் ஆகிய இருவரும் அழிவற்ற வர்கள். செல்லமான, தேடிக்கண்டெடுக் கப்பட்ட குழந்தைகளே, நான் ஒரே ஒரு முறை வந்து உங்களை தூய்மை ஆக்குகின்றேன்; உங்களை ஆத்ம அபிமானி ஆக்கி அசரீரி பவ, தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றேன் என்பதை தந்தை கூறுகின்றார். இது ஆத்மாவின் யாத்திரை ஆகும். அது சரீரத்தின் யாத்திரை ஆகும். ஆத்மாக்கள் இப்பொழுது வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதை இங்கே நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். யோக அக்னியின் மூலம் தான் உங்களுடைய ஜென்ம ஜென்மங்களின் பாவம் அழிந்து போகும். நீங்கள் பிராமணர் ஆக வேண்டும். ஆகவில்லை எனில் பிரஜையில் சாதாரண பதவியை அடைவீர்கள். கொஞ்சம் கொஞ்சம் (ஞானம்) கேட்கின்றனர் என்றால் அது விநாசம் ஆகாது. யார் நல்ல முறையில் படிப்பார்களோ, கற்பிப்பார்களோ அவர்களே உயர்ந்த பதவியை அடைவார்கள். சுலபத் திலும் சுலபமான விசயம் நினைவு ஆகும். பரமபிதா பரமாத்மாவை நினைவு செய்ய வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஒரு பகவான் மட்டுமே ஆவார். ஆகையினால், சிவபாபாவினுடைய பாடல் பாடுவது மட்டுமே சரியானது ஆகும். சிவபாபா நமக்கு சொல்கின்றார் என்று உங்களுடைய புத்தி அங்கே இருக்க வேண்டும். இப்பொழுது நாடகம் முடிவடைகிறது. நடிகர்களாகிய நாம் அனைவரும் இப்பொழுது சரீரத்தின் உணர்வை விடுத்து வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். தந்தையை நினைவு செய்வதன் மூலம் விகர்மங்கள் விநாசம் ஆகும். பிறகு, எந்தளவு நினைவு செய்வீர்களோ, அந்தளவு உயர்ந்த பதவியை அடைவீர் கள். ஒரு தூணை உருவாக்குகின்றனர், அங்கே ஓடிச் சென்று முதலில் கையால் தொடு கின்றனர் அல்லவா! உங்களுடைய தூண் சிவபாபா ஆவார். நினைவு யாத்திரையின் ஓட்டம் ஆகும். எந்தளவு நினைவு செய்வீர்களோ, அந்தளவு விரைவாக தூணைச் சென்றடைவீர்கள். பிறகு, சொர்க்கத்தில் வர வேண்டும். இந்த யாத்திரையில் களைப்படைய வேண்டாம். இப்பொழுது துக்கதாமம் முடிந்துவிட்டது. நாம் சுகதாமம், சாந்திதாமத்திற்குச் செல்ல வேண்டும். இன்று துக்கதாமம் உள்ளது, நாளை சுகதாமம் வரும். இப்பொழுது அனைவருக்கும் இந்த தந்தையின் நினைவை ஏற்படுத்துங்கள். தந்தை கையில் சொர்க்கத்தைக் கொண்டு வந்திருக்கின்றார். என் ஒருவரை நினைவு செய்தீர்கள் என்றால் படகு கரை சேர்ந்துவிடும் என்று கூறுகின்றார்.

நேரத்தை வீணாக்காதீர்கள். பக்தியில் கூட வேண்டாத, வீணான விசயங்களை அதிகமாகச் செய்தீர்கள். பகவானே எங்களுக்கு சத்கதியை கொடுப்பதற்கு வாருங்கள் என்று பக்தியில் எவ்வளவு கூக்குரலிடுகின்றனர். இப்பொழுது தந்தை வந்திருக்கின்றார். குழந்தைகளே! தூய்மையாகுங்கள் என்று புரிய வைக்கின்றார். ஜோடி இணைந்தே இருங்கள், நெருப்பு பற்றிக் கொள்ளாமல் இருக்கிறதா என்று பாருங்கள். நெருப்பு பற்றிக் கொண்டால் பதவி கீழானதாக ஆகிவிடும். ஒருமுறை நெருப்பு பற்றிக்கொண்டால் பிறகு, தொடர்ந்து பற்றிக்கொண்டே இருக்கும். ஆகையால், தன்னை பாதுகாக்கவும் வேண்டும். நினைவில் இருப்பதற்கான பயிற்சி அதிகமாகச் செய்ய வேண்டும். நினைவில் இருக்கும்பொழுது எவ்வளவு சத்தம் கேட்டாலும், பூகம்பம் வந்தாலும், அணுகுண்டு விழுந்தாலும் (மனோநிலை) என்ன ஆகிறது என்று பார்க்க வேண்டும். இந்த விசயங்களால் பயப்படக் கூடாது. இரத்த ஆறுகள் பாரதத்தில் தான் ஓடப்போகிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். பிரிவினையின்போது இரத்த நதிகள் ஓடின அல்லவா! அதிக ஆபத்துக்கள் வரப்போகின்றன, நீங்கள் பார்க்க வேண்டும், வேட்டைக்குத் திண்டாட்டம், வேட்டைக்காரனுக்குக் கொண்டாட்டம். நீங்கள் பரிஸ்தா ஆகிக்கொண்டு இருக்கிறீர்கள். யார் நல்ல சேவாதாரிகளாக இருப்பார்களோ, அவர்களே அந்த சமயத்தில் நிலைத் திருக்க முடியும், இதில் மிகுந்த வலிமை தேவை. சிவபாபாவை நினைவு செய்ய வேண்டும். சிவபாபாவைப் போன்ற இனிமையான தந்தை பிறகு ஒரு பொழுதும் கிடைக்க முடியாது. அவரது வழிப்படி தான் நடக்க வேண்டும். முக்கிய விசயமே தூய்மை ஆகுவது தான். யார் விகாரத்தில் செல்கிறார்களோ, அவர்களை பதீதமானவர்கள் என்று கூறப்படுகிறது. தேவதைகளோ சம்பூரண நிர்விகாரிகள் ஆவார்கள். இங்கேயோ, அனைவரும் விகாரிகள் ஆவார்கள். அது சிவாலயம் ஆகும். இது வேசியாலயம் ஆகும். இப்பொழுது விகாரியிலிருந்து நிர்வகாரி ஆகி சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியத்தைப் பெற வேண்டும். நான் பாவன உலகை ஸ்தாபனை செய்வதற்காக வந்திருக் கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். நான் உங்களை பாவன உலகின் எஜமானர் ஆக்குவேன். தூய்மை ஆகும் உதவி மட்டும் செய்யுங்கள், அனைவருக்கும் தந்தையின் அழைப்பைக் கொடுங்கள். ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் கூட எப்பொழுது நான் கீதை சொன்னேனோ, அப்பொழுது என் ஒருவரை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் தூய்மை ஆகிவிடுவீர்கள் என்று கூறினேன். சக்கரத்தைச் சுற்றினீர்கள் என்றால் சக்கரவர்த்தி இராஜா, இராணி ஆகிவிடுவீர்கள். ஆரோக்கியம், ஆஸ்தி மற்றும் மகிழ்ச்சி கிடைக்கும். சத்யுகத்தில் அனைத்தும் இருந்தது அல்லவா! என்னை நினைவு செய்தீர்கள் என்றால் 21 பிறவிகளுக்கு ஒருபொழுதும் நோயாளிகள் ஆகமாட்டீர்கள் என்று தந்தை கூறுகின்றார். சுயதரிசன சக்கரத்தைச் சுற்றிக்கொண்டே இருந்தீர் கள் என்றால் நீங்கள் சக்கரவர்த்தி இராஜா ஆகிவிடுவீர்கள். நான் வாக்கு அளிக்கின்றேன். பகவானின் மகாவாக்கியம். பாபா தந்தை மற்றும் ஆஸ்தியைப் பற்றிக் கற்பிக்கின்றார். மன்மனாபவ (என்னை நினைவு செய்யுங்கள்) மற்றும் மத்யாஜி பவ (ஆஸ்தியை நினைவு செய்யுங்கள்) அவ்வளவு தான். படிப்பு கூட எவ்வளவு எளியது! உள்ளத்தில் இதை எழுதிவிடுங்கள் போதும். யாரோ ஒரு சில வியாபாரி இந்தத் தொழிலுக் கான யுக்தியை (வழியை) ஆசிரியரிடமிருந்து பெறுகின்றார். அந்தத் தொழில் போன்றவை செய்யுங்கள், தடை எதுவும் கிடையாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகள், யார்

சுயம் தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்கிறார்களோ மற்றும் பிறருக்கும் கூட நினைவை ஏற்படுத்துகிறார்களோ, அவர்களே அன்பிற்கு உரியவர்கள் ஆவார்கள். அத்தகைய குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:

1. நினைவு யாத்திரையில் களைப்படையக் கூடாது. ஒருவருக்கொருவர் எச்சரிக்கை செய்து தந்தையின் நினைவை ஏற்படுத்த வேண்டும். தன்னுடைய நேரத்தை வீணாக்கக்கூடாது. வேண்டாத வீணான (பரசிந்தனை) விசயங்களைப் பேசக்கூடாது, கேட்கக்கூடாது.

2. மதிப்புடன் தேர்ச்சி பெறுவதற்காக எண்ணம், சொல், செயலால் எந்த ஒரு தவறும் செய்யக்கூடாது.

வரதானம் : திடசங்கல்பம் மூலமாக நடக்க முடியாததை நடக்கக் கூடியதாக ஆக்கி வெற்றியின் அனுபவம் செய்யக் கூடிய நிச்சயிக்கப்பட்ட வெற்றியாளர் ஆவீர்களாக.

நடக்க முடியாததை நடக்கக் கூடியதாக ஆக்கி விடக் கூடிய விசேஷ வரதானம் சங்கமயுகத்திற்கு இருக்கிறது. எனவே இது எப்படி முடியும் என்று ஒரு பொழுதும் இவ்வாறு யோசிக்காதீர்கள். எப்படி என்பதற்கு பதிலாக இப்படி ஆகும் என்று நினையுங்கள். இது நடந்து விட்டது போலவே தான் நடைமுறையில் கொண்டு வர வேண்டும். அவ்வளவே, ரிபீட் செய்ய வேண்டும் என்ற நிச்சயம் வைத்து நடவுங்கள். திட சங்கல்பத்தை பயன் படுத்துங்கள். எண்ணத்து அளவில் கூட என்ன, ஏன் என்ற குழப்பம் இல்லாதிருக்கட்டும். அப்பொழுது வெற்றி நிச்சயிக்கப்பட்டதாக இருக்கவே இருக்கும். திட சங்கல்பத்தை பயன்படுத்துவது என்றால் சுலபமாக வெற்றியை அடைந்து விடுவது, ஆகும்.

சுலோகன்: எப்பொழுதும் செய்பவர் செய்விப்பவரான தந்தையின் நினைவு இருந்தது என்றால், தேக உணர்வு மற்றும் தேக அபிமானம் முடிந்து போய் விடும்.